**சுருக்கம்**

இணைப்புக் குழு - சென்னை மாநகராட்சி மற்றும் தீயணைப்புத் துறையும் ஒருங்கிணைந்து அமைக்கப்பட்ட இணைக்குழு - குழுவின் பதவிக் காலத்தை 18.08.2000 முதல் மேலும் ஓராண்டிற்கு நீட்டித்து ஆணை வெளியிடப்படுகிறது .

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை**

**அரசாணை (வாலாயம்) எண் 577** **நாள்: 05.10.2000**

படிக்கப்பட்டது:

1 . 19.08.97 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை (நிலை) எண் 214.

2. 27..01.2000 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அரசாணை (நிலை) எண் 9.

3 1.08.2000 நாளிட்ட சென்னை மாநகராட்சி ஆணையரின் கடித எண் பி.4/1537/ 98.

------

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை மாநகராட்சி மற்றும் தீயணைப்புத் துறையும் ஒருங்கிணைந்து தீயணைப்புத் துறை குறித்த பணிகளை ஆய்வு செய்ய சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் தலைமையில் பதினோறு நபர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது . இக்குழு ஓராண்டு காலம் முதலில் செயல்படுமென்றும் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் இதன் பதவிக்காலம் நீட்டிக்கப்படும் என்றும் ஆணையிடப்பட்டது . கடைசியாக இக்குழுவின் பதவிக் காலத்தை 18.08.1999 முதல் மேலும் ஓராண்டிற்கு நீட்டித்து மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது, .

2.. 24.08.2000 நாளிட்ட சென்னை மாமன்றத் தீர்மான எண்.05.05.2000க்கு இணங்க இவ் இணைக்குழுவின் பதவிக் காலத்தை 18.08.2000 முதல் மேலும் ஓராண்டிற்கு நீட்டித்துத் தருமாறு மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார் .

3. சென்னை மாநகராட்சி ஆணையரின் செயற்குறிப்பை ஏற்று, சென்னை மாநகராட்சி மற்றும் தீயணைப்புத் துறையும் ஒருங்கிணைந்து தீயணைப்புத் துறை குறித்த பணிகளை ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட இணைக்குழுவின் பதவிக் காலத்தை, தற்பொழுதுள்ள உறுப்பினர்களுடன் 18.08.2000 முதல் மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே நீட்டித்து ஆணையிடுகிறது .

(ஆளுநரின்ஆணைப்படி)

**சு.மாலதி,**

அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்:</u>

ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை -600 003. (மேயர் மூலமாக)

சென்னை மாவட்ட ஆட்சியர், சென்னை 600 001.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னை 600 005 .

தமிழ்நாடு தீயணைப்புத் துறை,12, ருக்குமணி லட்சுமிபதி சாலை, பெரம்பூர், சென்னை 600 008.

இயக்குநர் , உள்ளாட்சி நிதிக் கணக்குத் துறை , சென்னை 600 108.

<u>நகல்:</u>

உள் (போலீஸ்) துறை , சென்னை 600 001 .

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (வரவு -செலவு) துறை, சென்னை 600 009 .

முதலமைச்சர் அலுவலகம், சென்னை 600 009 .

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

**பிரிவு அலுவலர்.**